2018 ஜூலை 5]

276—

தானியக் கிடங்கு

***28143—திருமதி பெ. சீத்தாபதி:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் தொகுதி, ஆவணிப்பூர் கிராமத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்மூலம் தானியக் கிடங்கு கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் தொகுதிக்குட்பட்ட, சந்தைமேடு பகுதியில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான இடத்தில், 1,500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்கு இயங்கி வருவதாலும், ஆவணிப்பூர் கிராமத்திற்கு அந்தக் கிடங்கிலிருந்து அத்தியாவசியப் பொருட்கள் நகர்வு செய்யப்பட்டு வருவதாலும், தனியாக ஒரு தானியக் கிடங்கு கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி அவர்கள்.*

திருமதி பெ. சீத்தாபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்வுஇலாச்
செல்வரும் சேர்வது நாடு."

நல்ல விளைச்சலை உற்பத்தி செய்யக்கூடிய விவசாயப் பெருங்குடி மக்களும், கற்றறிந்த சான்றோர்களும் அழியாத

செல்வத்தையும் பெற்றிருப்பதுதான் ஒரு சிறந்த நாடு என்பது வள்ளுவர் வாய்மொழி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருட்களை முறையாகப் பாதுகாத்து அதற்கு முறையான விலையை நிர்ணயம் செய்ய வேண்டியது அரசினுடைய கடமை. எனவே, திண்டிவனம் தொகுதிக்குட்பட்ட ஒலக்கூர் ஒன்றியம், ஆவணிப்பூரில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்மூலம் தானியக் கிடங்கு மற்றும் விற்பனைக்கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கடமைகளையெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு சரியாகச் செய்து கொண்டிருக்கிறது. நெல் கொள்முதலாக இருந்தாலும் சரி, அந்த நெல்லை உற்பத்தி செய்வதாக இருந்தாலும் சரி, அதனைப் பாதுகாத்து வைப்பதாக இருந்தாலும் சரி, இந்தக் கடமைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முறையாக, சரியாக செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். விலையைப் பொறுத்தவரை, மத்திய அரசுதான் குறைந்தபட்ச ஆதார விலையை நிர்ணயிக்க வேண்டும். அதனைத் தொடர்ந்து ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வொரு விலையை நிர்ணயித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு ஊக்கத் தொகையை தமிழக அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திண்டிவனம் தாலுகாவில் அமைந்துள்ள நியாய விலை அங்காடிகள், சத்துணவுக் கூடங்கள், அங்கன்வாடி மையங்கள் மற்றும் அரசு விடுதிகள் ஆகியவற்றுக்கு திண்டிவனம் தாலுகா விநியோகக் கிடங்கிலிருந்து சுமார் 2,000 மெட்ரிக் டன் அத்தியாவசியப் பொருட்கள் ஒவ்வொரு மாதமும் நகர்வு செய்யப்படுகின்றன. எனவே, உறுப்பினர் சொல்கிற ஆவணிப்பூர் பகுதிக்கும், அந்த ஆவணிப்பூர் பகுதியிலுள்ள நியாய விலை அங்காடி,

2018 ஜூலை 5]

கல்லூரி விடுதி, மருத்துவமனை ஆகியவற்றுக்குத் தேவைப்படும் 75 மெட்ரிக் டன் பொருட்களும் அந்தக் கிடங்கிலிருந்துதான் நகர்வு செய்யப்படுகின்றன. எனவே, புதிதாக ஒரு கிடங்கு அமைப்பதற்கு அவசியம் எழவில்லை என்பதைத்தான் நான் இங்கே குறிப்பிட்டுச் சொன்னேன். வருங்காலங்களிலே தேவையின் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதனையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி அவர்கள்.*

திருமதி பெ. சீத்தாபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவணிப்பூர் ஊராட்சியை மையமாகக் கொண்டு ஏறக்குறைய 30 ஊராட்சிகள் உள்ளன. இப்பகுதியானது ஆவணிப்பூர், கடவம்பாக்கம், சேந்தமங்கலம், வடகளவாய், கம்பூர், ஓங்கூர், தானங்குப்பம், அன்னம்பாக்கம், அண்டப்பட்டு, சேவூர், பூதேரி, குன்னப்பாக்கம், கருப்பூர், கீழ்நெமிலி, மண்டபெரும்பாக்கம், தென்னம்பூண்டி, பாங்கொளத்தூர், பனையூர், கோனேரிகுப்பம், நொளம்பூர், ஈச்சேரி, கூடலூர், ஏப்பாக்கம், வடநெற்குணம், நல்லூரர், நாகல்பாக்கம், பந்தாடு நகர், மண்ணூர், பள்ளிப்பாக்கம் ஆகிய 30 ஊராட்சிகள் அடங்கிய விவசாயிகள் நிறைந்த பகுதி. ஏறக்குறைய 10,000-க்கும் மேற்பட்ட விவசாயக் குடும்பங்கள் நிறைந்த பகுதி. இப்பகுதியில் 50,000 ஏக்கருக்கும் மேற்பட்ட நன்செய் மற்றும் புன்செய் நிலங்கள் உள்ளன. இவற்றில் நெல், மணிலா, உளுந்து போன்ற தானியங்கள் விளைகின்றன. ஆக, இங்கு விளைகின்ற தானியங்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்மூலம் அரசே கொள்முதல் செய்து விற்பனை செய்ய தானியக் கிடங்கு மற்றும் விற்பனைக் கூடம் அமைத்துத் தர வேண்டுமென்று இந்த அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் மூலமாக இதுபோன்ற நடவடிக்கைகளை வேளாண்மைத் துறையிலே தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தைப் பொறுத்தவரையில், நெல்*

கொள்முதல் செய்வதுடன், இந்த ஆண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய அறிவுரையின்படி, உளுந்து, பயறு போன்றவற்றையும் கொள்முதல் செய்வதற்கான வாய்ப்புகளை விவசாயிகளுக்கு தமிழ்நாடு அரசு உருவாக்கியிருக்கிறது என்பதனையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—50

கிடங்குகள் கட்டுமானத்தைப் பொறுத்தவரை, 2011 ஆம் ஆண்டு வரை 12 இலட்சத்து 93 ஆயிரம் மெட்ரிக் டன்னாக இருந்த கொள்ளளவினை 7 ஆண்டுகளில் 23 இலட்சத்து 28 ஆயிரம் மெட்ரிக் டன்னாக உயர்த்தித் தந்தது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதனை இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) போதுமான கிடங்குகள் அந்தந்தப் பகுதியில் தேவைக்கேற்ப அமைத்துக் கொடுப்பதற்கான அத்தனை நடவடிக்கைகளையும் மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் நடைபெறும் அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 277, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். விஜயகுமார், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

277—

ஆரம்ப சுகாதார நிலையம்

***14733—திரு. கே.எஸ். விஜயகுமார்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், ராக்கம்பாளையம் ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,